செய்தி வெளியீடு எண்: 466 நாள் :02.09.2013

# செய்தி வெளியீடு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழக அரசில் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வரும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்கள் தலைமையில் 02.09.2013 இன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.**

-------

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி மகளிர் நலனுக்காக இல்லத்தரசிகளுக்கு 2011–2012 ஆம் ஆண்டு 25 லட்சம் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி, பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கப்பட்டன.

மேலும், 2012–2013 ஆம் ஆண்டில் 35 லட்சம் அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு, விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள், வழங்க உத்தரவிடப்பட்டு, பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுவிட்டன.

இவ்வாண்டும் (2013–14), மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 35 லட்சம் விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திடம் பயனாளிகளுக்கு வழங்குவதற்காக, மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் கொள்முதல் செய்ய உத்தரவிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் துறையின் இதர திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

மேலும், அனைத்து மாவட்டங்களில் விநியோகிக்கப்படவிருக்கும் எண்ணிக்கை, சேவை மையங்கள், பொருட்களை பாதுகாப்பாக பேக்கிங் செய்தல், பொருட்களை வைப்பதற்கான அறைகள் மற்றும் விநியோகம் செய்தல் ஆகியவை குறித்தும் விவாதிக்கப்பட்டன.

இக்கூட்டத்தில், சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் சாந்தினி கபூர், இ.ஆ.ப, அவர்கள், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் திருமதி எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப., அவர்கள், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் திரு ஸ்வரண்சிங், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு மா.சந்திரசேகரன், இ.ஆ.ப, அவர்கள், வருவாய் நிர்வாக இணை ஆணையர் திரு.மு.ஜெயராமன், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9